Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 30-7-85 செவ்வாய்க்கிழமை (ஆடி 15 ஜுலைகஸ்தா 11) முழக்கம் 174

## ஊரெழு குண்டு வெடிப்புகளும் குடாநாட்டு வதந்திகளும்!

நேற்று முற்பகல் ஊரெழுவுக்கும் புன்னாலைக்கட்டுவனுக்குமிடையில் வெடித்த நாலு குண்டுகளைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் முழுவதும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பல்வேறு வதந்திகளும் குடாநாடு முழுவதும் பரவத் தொடங்கியது. அதேவேளை பலாலியிலிருந்து உணவுப் பொருட்களை லொறிகளில் ஏற்றி வந்த ராணுவத்தினர் நடை பவனியாக புன்னாலைக்கட்டுவன் சந்தியால் ராசபாதைக்கு வந்து, முடமாவடி வழியாக யாழ்ப்பாணம் சென்றடைந்தனர். வழிகளில் மதகுகள், கட்டடங்களையும் அவர்கள் சோதனையிட்டனர். குண்டு வெடிப்பால் எவருக்கும் காயமேற்படவில்லை.

# ஆகஸ்ட் 12ம் திகதி பூட்டான் பேச்சுக்களுக்கும் 'ஹெக்டர்' தலைமையிலான குழுவே செல்கிறது

(கொழும்பு)

ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி பூட்டான் தலைநகரான திம்புவில் ஆரம்பமாகும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கும் இலங்கைக் குழுவுக்கு சனாதிபதி ஹெக்டர் ஜெயவர்த்தனவே தலைமை தாங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், முன்னர் சென்ற சகல பிரதிநிதிகளும் இம்முறையும் செல்வார்களா, அல்லது புதிய அங்கத்தவர்கள் செல்வார்களா என்பது பற்றிய விபரங்களைத் தெரிவிக்க அரசாங்க வட்டாரங்கள் மறுத்துவிட்டன.

அனேகமாக புதிய முகங்கள் ஆறு அல்லது ஏழு இம்முறை சேர்த்துக் கொள்ளப்படலாமென்றும், இரு முக்கிய அமைச்சுக்களின் செயலாளர்கள் இடம்பெறும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை ஆகக் குறைந்தது பத்துத் தினங்களுக்காவது நடைபெறலாமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# வவுனியா பண்டாரிக்குளத்தில் ராணுவம் சுட்டு ஒருவர் மரணம்

## சடலம் ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு; சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டன!

(வவுனியா)

வவுனியாவில் பண்டாரிக்குளம் என்ற இடத்திலுள்ள அம்மன்கோவிலுக்கு அருகாமையில் நேற்றுக் காலை ராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமானார். இவரது சடலம் ராணுவத்தினரால் வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

மூன்று இளைஞர்கள் சைக்கிளில் வந்த போது ராணுவத்தினர் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், ஒருவரே மரணமானதாகவும் மற்றவர்கள் காயத்துடன் தப்பிச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இளைஞர்களின் இரண்டு சைக்கிள்களையும் தமது வாகனத்தில் ஏற்றிச் சென்று, வவுனியா பொலிஸில் கையளித்தனர்.

ராணுவத்தினரால் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட இளைஞரின் சடலம் அடையா

—6ம் பக்கம் பார்க்க

## கான்ஸ்டபிள் திருநாவுக்கரசு கொலை தொடர்பாக இரு பொலிஸார் ரிமான்டில்

(மாத்தறை)

திஸ்ஸமகாராம பொலிஸ்நிலைய விடுதிக்குள் வைத்து பொலிஸ் கான்ஸ்டபிள் திருநாவுக்கரசு வெட்டிக்கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இக் கொலை தொடர்பாக விசாரணை நடத்திவந்த ரகசிய பொலிஸாரே இவர்களைக் கைது செய்தனராம்.

கைதானவர்கள் நால்வரும் பொலிஸ்காரர்கள் என்றும், இருவர் ரிமான்டில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. தொடர்ந்து விசாரணை நடைபெறுகின்றது.

## யாழ் மாவட்ட உர வாரத்தில் விவசாய மன்னர்கள் தெரிவு

யாழ்ப்பாண மாவட்டத்தில் உர வாரத்தை செப்டம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவரிடையே கட்டுரைப்போட்டி, சுவரொட்டிப் போட்டி ஆகியவற்றையும் விவசாய சேவை நிலையங்களில் விவசாயிகள் கருத்தரங்கு, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் விநியோகஸ்தர்கள் கருத்தரங்குகள் நடத்தப்படும்.

விவசாய மன்னர்கள் தெரிவும் நடைபெறும், உரபாவனை தொடர்பான கை நூலொன்றும் வெளியிடப்படும்.

## 'தகழி'க்கு ஞானபீட விருது

1984 ஆம் ஆண்டுக்கான ஞானபீட விருது பிரபல மலையாள மொழி எழுத்தாளர் தகழி சிவசங்கரப்பிள்ளைக்குக் கிடைத்துள்ளது. இந்த விருது ஒன்றரை லட்சம் ரூபா ரொக்கப் பணத்தைக் கொண்டது.

## நூல் கண்காட்சி

தமிழக அரசு யாழ். பொது நூலகத்துக்கு வழங்கிய நூல்களின் கண்காட்சி நல்லூர் இந்து விடுதியில் நாளைவரை நடைபெறும்.

## 'லங்கா புவத்' நேற்று அறிவிப்பு: காணமல்போன இந்திய கப்பல்களை தீவிரவாதிகளே கடத்தினராம்!

(கொழும்பு)

திருகோணமலைக் கடற் பிரதேசத்தில் வைத்து இரண்டு இந்திய சரக்குக் கப்பல்களை தமிழ்த் தீவிரவாதிகள் கடத்திச் சென்றதாக 'லங்கா புவத்' நேற்று அறிவித்தது.

இக்கப்பல்கள் கடந்த மாதம் 21 ஆம், 24 ஆம் திகதிகளில் இந்தியாவிலிருந்து காணமல் போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றைத் தேடும் முயற்சியில், இந்திய விமானப் படையினரும், கடற்படையினரும் ஈடுபட்டு பின்னர் அம்முயற்சி கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு வந்துவிட்டுத் திரும்பிய கப்பல்கள் இந்தியா சென்றடையாததால் இவை காணமல் போனதாக அறிவிக்கப்பட்டது.

கல்கத்தாவில் இருந்து கிடைத்த அறிக்கையொன்றை மேற்கோள் காட்டியே தீவிரவாதிகள் கப்பல்களைக் கடத்தியதாக 'லங்கா புவத்' மேலும் தெரிவித்துள்ளது.

## அரசாங்கம் திட்டவட்டமாக அறிவிப்பு: பூட்டானை தவிர வேறெங்கும் இனப்பிரச்சினை மகாநாடு நடைபெறாது!

இனப்பிரச்சினைபற்றி தமிழர் குழுக்களுடன் பூட்டானுக்கு வெளியே பேச்சுவார்த்தை நடத்தும் எண்ணம் தமக்கு இல்லை என்று அரசாங்கம் நேற்று திட்டவட்டமாக அறிவித்ததாக அரச செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

நேற்றைய பத்திரிகையொன்றில் பி.ரி.ஐ. செய்தியை மேற்கோள் காட்டி வெளிவந்த செய்தி தவறு எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

திம்பு பேச்சுவார்த்தையில் வெளியார் தலையீடு வேண்டாம் என அரசாங்கம் கூறுவது போல திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தன அரசாங்கத்துக்கு தெரிவித்ததாக பி.ரி.ஐ செய்திஸ்தாபனம் தெரிவித்ததாக இந்த செய்தி வெளியிடப்பட்டது.

பூட்டான் பேச்சுவார்த்தையின் இரண்டாம் கட்டம் ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## உகண்டா ஜனாதிபதியாக ஒகல்லே பதவியேற்றார்

உகண்டாவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இராணுவ புரட்சிக்குப் பின் லெப்டினன்ற் ஜெனரல் டிட்டோ ஒகல்லே புதிய ஜனாதிபதியாக நேற்று பதவியேற்றார்.

பன்னிரண்டு மாதங்களில் தேர்தல் நடைபெறும் என்றும் அதுவரை இவர் நாட்டின் தலைவராக இருப்பார் என்றும் கம்பாலா வானொலி நேற்று அறிவித்தது.

அறுபத்திநான்கு வயதான

...6ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் தற்கொலை

(பாங்கொக்)

தாய்லந்தின் விஞ்ஞான, தொழில்நுட்ப எரிசக்தி அமைச்சர்

...6ஆம் பக்கம் பார்க்க

## கடத்தப்பட்ட இளைஞரை விடுதலை செய்யுமாறு வேண்டி கோண்டாவிலில் உண்ணாவிரதம்

(வண்ணார்பண்ணை)

கடந்த சனிக்கிழமை கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் ரஞ்சன் என்ற இளைஞனை விடுதலை செய்யுமாறு கோரி கோண்டாவிலில் சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் முன்றலில் நேற்று உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

இவ் இளைஞன் விடுதலை செய்யப்படும்வரை தினமும் காலை முதல் மாலை வரை உண்ணாவிரதம் தொடர்ந்து நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெருந்தொகையான

—6ஆம் பக்கம் பார்க்க

## ராஜதந்திரிகள் வெளியேற்றம்

மேற்கு ஜேர்மனியில் உள்ள நான்கு லிபிய ராஜதந்திரிகள்

...6ஆம் பக்கம் பார்க்க

### இன்று: உடுவில் கிழக்கு

# கற்பகப் பிள்ளையார் முதலாவது தேர் உற்சவம்

தேவலோகத்திலே இருக்கும் மூன்று அரும்பொருட்கள் கேட்டவரமளிப்பன. அவற்றுள் கற்பகதருவுமொன்று: முக்கண் அப்பனே பிள்ளைப் பெருமானுமாவார்: அவர் கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி. உடுவில் கிழக்கிலே கோயில் கொண்டருளி கேட்ட வரமளிக்கும் பிள்ளையார் "உம்பர்தரு, தேனு, மணிக்கசிவசி...யிருந்து இடர் தீர்க்கிறார். நல்லூரை இராசதானியாகக் கொண்டு பரராசசேகரப்பெருமான் என்னும் அரசன் அரசோச்சியபோது இணுவிலே கோவிற் பணி செய்தான்.

இணுவையில் வீரத்தனபதியாயிருந்த நட்சத்திர கோதண்டன் வாழ்ந்த பதியாகிய உடுவில் (உடு-நட்சத்திரம், வில்-கோதண்டம்) பண்டு இருந்தே சைவச் சான்றோர்கள் மலிந்த இடம். வரலாற்றுப் பெருமை மிக்க கற்பகவிநாயகனாலயம் அப்பர் என்றழைக்கப்பட்ட அடியாரின் காலத்தே 18-ம் நூற்றூண்டு முற்போதிலே மிகப் பெருமை பெற்று விளங்கிய கதை யாவருமறிவர்.

மூன்று அத்தியாயங்களாக இவ்வாலய வளர்ச்சியினை 1979 இல் வெளியான கும்பாபிஷேக மலர் கூறுகிறது. நாவலரது அத்தியாயமென அண்மையில் வாழ்ந்து தொண்டு பல ஆற்றி, கட்டடப் புனரமைப்பிலும் முன்னின்ற 'சுப்பிரமணியம்' எனப்படும் "மணியம் சாமியாரின்" பணி போற்றப்பட அறிகிறோம்.

கோவிலின் வளர்ச்சி துரிதகதியில் அண்மைக் காலத்தில் நிகழுவது யாவருமறிவது. தற்போதைய தரும கர்த்தா சபையின் அளப்பரிய சேவையால் நித்திய நைமித்திய கிரியைகளின் நிறைவுக் கிரியையான மகோற்சவம் இம்முறை 21 ஆம் தேதி துவஜாரோகண வைபவத்துடன் ஆரம்பமானது. இன்று சதுர்த்தசியில் காலை 9 மணிக்கு இரதோற்சவம் நடைபெறும். "பாசத்தளையறுத்து பாவக் கடல் கலக்கி, நேசத் தளைப்பட்டு நிற்கும் நின்மலனை கற்பகப் பிள்ளைக்கு ஆண்டு பல்லாண்டாக கோவிலெடுத்துப் போற்றிய பயன் இன்று தான் நிறைவேறுகிறது என்று உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் பக்தர்கள் பெருமையோடும், பக்தியோடும் மகிழும் பொன்னான தினம் இன்று.

'அப்பனே, உன் பக்கத்தில் யானிருப்பதை மறந்தனையோ' என்று அப்பருக்கு எம்பெருமான் கற்பகக் கடவுள் கனவிலே கேட்டது எமக்கும் கேட்கிறது. அண்டை மனைகுடிகளிலும், கமங்களிலும் அல்லிடையும் அடியவர்கள் வாழ்த்த, அரோகரா ஆர்ப்பரிப்புடன், பக்தர்கள் புடைசூழ்ந்து பஜனை செய்ய இனிய வாத்தியம் சகிதம், அடியார் வடம் பிடித்திழுக்க கற்பகன் வீதி வலமாக முதன் முதல் தேரேறி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாய் அமையும்.

● இளம் சைவப் புலவர்
எம். எஸ், ஸ்ரீதயாளன்

## இளைப்பாற்று அறை

(இருபாலை)

யாழ். அரசினர் வைத்திய சாலையில் கடமையாற்றும் ஊழியர்களின் நலன் கருதி ஊழியர்கள் தங்கியிருந்து தமது கடமைகளைச் செய்வதற்கென புதிய "இளைப்பாறும் அறை" ஒன்று யாழ். வைத்திய அதிபரினால் திறந்து வைக்கப்பட்டது.

### வெள்ளிக்கிழமை....

...4-ம் பக்கத் தொடர்

மீன விரும்பினேன். ஆயினும் வள்ளங்கள் வெள்ளிக்கிழமைகளில் புறப்படுவதில்லை என்றார் பெரசி. காரணம், வெள்ளியன்று கடல்மீது பயணம் துவங்குவது துர்ப்பாக்கிய வசமானது எனக் கருதப்படுகிறதாம். தர்க்கத்திற்காக, நான் ஒரு புதிர்விடுத்தேன். ஒரு வெள்ளிக்கிழமை, கடல்கடந்த கெரில்லாத் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப் பெற வேண்டி ஏற்பட்டால், உங்கள் இயக்கம் எப்படிச் செயலாற்றுமாக்கும்?" எனக் கேட்டுவைத்தேன் நான். முகத்தில் ஒரு புன்னகை நிலவ, பெரசி தனது பார்வையை எங்கோ தொலைவில் அலைய விட்டார். சிறிது கழிந்து, அவர் என்னிடம் கூறியது இது: "முதற்கண், எமது கெரில்லாத் தாக்குதல்களை நாங்கள் கடல் கடந்து திட்டமிடுவதில்லை. விடயத்துடன் சம்பந்தப்பட்ட அற்ப சொற்ப காரியங்களைக் கூட நன்கு சீர்தூக்கிப் பார்த்த பின்னரே எமது திட்டங்கள் செயல் உருப் பெறும்: அதனாலேயே கடந்த இரண்டு ஆண்டுகளாக எமது இயக்கம் இழந்த ஆட்களின் எண்ணிக்கை மிகமிகச் சொற்பமாக இருந்துள்ளது.

அடுத்த இரு தினங்களாக, நான் தமிழ் விடுதலை இயக்கத்தின் ஒரு முகாமில் முழு நேரமும் தங்கியிருந்தேன். அங்கிருந்தவர்கள் என்னுடன் இதமாக, அன்பாகப் பழகினர்; இருந்தாலும், அந்த இரு நாளும் ஒரு முட் குவியலின் மீது குந்தியிருப்பது போல நான் அவஸ்தைப்பட்டேன்.

இந்தியாவுக்கு மீளவேண்டும் என்ற ஆவலால் நான் அவ்வளவு துடியாகத் துடித்துக் கொண்டிருந்தேன். நாமத்திற்கேனும் அங்கே செய்தித்தாள்கள் கிடையாது. இன்று கிழமையில் என்ன நாள்? எத்தனையாம் திகதி? சாதாரணமான இவ்விபரங்களை அறிதற்குக்கூட நான் "கலெண்டர்" எனப்படும் நாள் காட்டியை அடிக்கடி பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

(தொடரும்)






❋ வேலணை மேற்கு டாக்டர் க. ஜெயச்சந்திரன் மேரி மெற்லின் தம்பதிகளின் மகள் சுகன்யா (சுகி) இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ அரியாலை சுப்பிரமணியம் வீதி புஸ்பராசா தம்பதிகளின் மகள் மகிழ்ந்தினி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ பத்தானை டச்றேட் சிவானந்தராசா யேனுராணி தம்பதிகளின் மகன் நந்தகுமாரன் இன்று தனது மூன்றுவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ யாழ். மணிக்கூட்டு வீதி, விஜயபாஸ்கரன் பாலசரஸ்வதி தம்பதிகளின் மகன் தனுசன் இன்று இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ ஆனைப்பந்தியடி பருத்தித்துறை வீதி முத்துச்சாமி விஜயா தம்பதிகளின் மகன் சதயா ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ அச்சுவேலி நடராஜா நகுலாம்பிகை தம்பதிகளின் மகள் சதர்சினி இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ புலோலி கிழக்கு பாலசிங்கம் இந்திராணி தம்பதிகளின் மகள் யாழினி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ இருபாலை விநாயகர் வீதி பாலசுப்பிரமணியம் பவானிராணி தம்பதிகளின் மகன் சுமதி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

## என் மீது அயர்வேனே?

ராகம்: சங்கராபரணம் தாளம்: மிஸ்ர சாபு

பல்லவி

என்னை ஆதரித்தருள்வாயே – என் தாயே

அநுபல்லவி

முன்னை வினைகளெல்லாம் என்னை வந்தணுகாமல்
உன்னை நான் வந்தித்தேன் என் அன்னை ஜகன்மாதா

சரணம்

பொன்னுரும் உந்தன்மேனி தண்ணொளி உந்தன்பார்வை
என்னுரும் உன்கருணை என்மீது அயர்வேனோ?
எந்நாளும் உன்தரிசனம் எந்நேரம் உந்தன் நாமம்
கண்ணுதிட்டி யமரும் காளிகாதேவி தாயே (என்னை)

—டபிள்யு. எஸ் செந்தில்நாதன்

(இன்று வண்ணை அருள்மிகு காளிகோயில் சித்திரத்தேர் வெள்ளோட்டம்)


## வெற்றிடங்கள்

பொருத்துனர் ஒட்டுனர்
கொல்லர் தகர வேலையாளர்

(Fitters. Welders, Blacksmiths, Sheet metal workers)

மேற்கண்ட வேலைகளில் சேரவிரும்புவோர் 30 அல்லது 1ம் தேதி அலுவலகத்துக்கு நேரில் வரவும். முன்னர் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்

476, பிரதான வீதி; சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

இலங்கைப் பல்கலைக்கழக
வெளிநிலைப் பாடநெறிகள்

பாடநெறி சட்டம் (L L.B.)

தமிழ் மொழி மூலம்

விரிவுரைகள் 4.8.85 இல் ஆரம்பமாகின்றன

க. பொ. த. (உயர்தரம்) அல்லது வேறு உயர் தகைமையுடையோர் விண்ணப்பிக்கலாம்,

பதிவாளர்

JAFFNA LAW ACADEMY

Power House Road, Jaffna.

## வரி விளம்பரம்

### பயிற்சி

Computer Programming, ரெலிவிசன், வீடியோடெக் றிப்பெயறிங், எலெக்ரிக்கல் வயறிங் ஆகிய பயிற்சிகளிற்கு 03-08 85 வரை மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் விபரங்களிற்கு Jaffna Technical Institute கிராஸ்லி வீதி (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம் அல்லது Jaffna Technical Institute, தபால் கந்தோர் வீதி, (தபால் கந்தோர் அருகாமை) நெல்லியடி, கரவெட்டி என்ற முகவரிகளுடன் தொடர்புகொள்ளவும்.

### விற்பனைக்கு

புதுறோட் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் 1½ பரப்புக்காணியில் கிணறு, மின்சாரவசதியுடன் கூடிய 3 அறைகள், குசினி, விறாந்தை உட்பட கல்வீடும் விற்பனைக்குண்டு தொடர்பு பா. காசிநாதன், நோனுமைகால், புதுறோட் ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை

### தேவை

எமது விவசாய நிறைவேற்றும் பணியக யாழ்ப்பாணக் கிளைக்கு லிகிதர் தேவை. மாவை விநாயகர் மங்கள ஏஜன்சி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

EURO LANKA TRAVELS LTD.

யூரோலங்கா ட்ரவல்ஸ் லிமிரெட்

40, 3ம் குறுக்குத் தெரு - யாழ்ப்பாணம்

முக்கிய கவனிப்பு!

எமது ஆதரவாளர்களின் வசதியை முன்னிட்டு
கீழ்க்காணும் முகவரியிலும்
எமது ஸ்தாபனம் நிறுவப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்

185/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(முதலாம் மாடி)
வின்ஸர் படமாளிகைக்கு முன்னால்

பின்வரும் வெளிநாடுகளுக்கு
குறைந்த கட்டணத்தில் விமான டிக்கெட்டும்
மற்றும்
விசா, பாஸ்போட் முதலிய ஒழுங்குகளும்
செய்து கொடுக்கப்படும்

மதராஸ், திருச்சிராப்பள்ளி, திருவனந்தபுரம்
பம்பாய், சிங்கப்பூர், மலேசியா,
இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி,
பிரான்ஸ், ஸ்பெயின், அமெரிக்கா

வேண்டிய விபரங்களுக்கு உடனடியாக மேலுள்ள விலாசத்தில் அல்லது கொழும்பிலுள்ள எமது தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.

தலைமைக் காரியாலயம்

EURO LANKA TRAVELS LIMITED

6A, DAISY VILLA AVENUE, COLOMBO - 4.
தொலைபேசி: 585990, 589993
Cable: TOURGUIDE
Telex: 21714 TXSAAT CE TOUR

ஈழமுரசு
30—7—85


# தமிழாசிரியர் சங்கத்தின் செயலாளர் தரும் விளக்கம்

இம்மாதம் 18ந் திகதி ஈழமுரசில் வெளிவந்த கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளரின் விளக்கக் கடிதம் சார்பாக எனது விளக்கத்தைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

தயாரத்தின சம்பள மீளாய்வுக் குழுவின் விதப்புரையின்படி 1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாந் திகதியிலிருந்து ஆசிரியர்களுக்கான சம்பளம் மாற்றியமைக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைக்குள் இயங்கும் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் சங்கீத/நடன டிப்ளோமாப் பட்டம் பெற்று ஆசிரியர்களாகக் கடமை புரியும் அனைவருக்கும் 1985.01.01 முதல் பட்டதாரி ஆசிரியர்களுக்குரிய சம்பளம் வழங்க வேண்டும் என மிகத் தெளிவாக தயாரத்தின குழுவின் விதப்புரை தெரிவிக்கிறது. ஆனால் இவ்வாறான ஆசிரியர்களின் சம்பளத்தைக் கிளிநொச்சிக் கல்வித் திணைக்களம் இன்றுவரை மாற்றியமைக்கவில்லை எனப் பலர் என்னிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதனையே நான் கல்வி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன். எனது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கல்வி அமைச்சு 85-07-05ஆந் திகதியிட்டதும் 4/கா/ஆகி3/2055 ஆம் எண் கொண்டதுமான பணிப்புரையைக் கிளிநொச்சிக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பியது. பணிப்புரை இதுவரை தமக்குக் கிடைக்கவில்லையென்று கிளிநொச்சிக் கல்விப் பணிப்பாளர் மறுப்பதுடன் மட்டுமன்றி, "பொறுப்பற்ற முறையில் ஆதாரமற்றவற்றைக் கூறி ஆசிரியர்கள் மத்தியில் ஓர் குழப்ப நிலையை உருவாக்கி தொழிற்சங்க இலாபம் ஈட்டுவதற்கே தமிழ் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் முயல்வது போல் தோன்றுகிறது" எனவும் கூறி என்மீது குற்றம் சுமத்துகிறார்.

உரிய சம்பளம் வழங்குமாறு கல்வி அமைச்சு அனுப்பிய கடிதம் இன்றுவரை கிளிநொச்சிக் கல்விப்பணிப்பாளருக்குக் கிடைத்திராவிட்டால் மீண்டும் ஒரு கடிதம் அவருக்கு அனுப்பி வைக்க ஏற்ற ஒழுங்குகளை சங்கம் மேற்கொள்ளும்.

பொறுப்பற்ற, ஆதாரமற்றவைகளைக் கூறி நாம் என்றும் சங்கத்தை வளர்க்கவில்லை என்பதையும், இனியும் அவ்வாறான நிலைமைக்கு நாம் ஆட்படமாட்டோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

த. மகாசிவம்
பொதுச் செயலாளர்

## பாவனையாளர் சங்க நிர்வாகிகள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கிராம சேவகர் பிரிவு பாவனையாளர் சங்கத் தலைவராக வைத்திய கலாநிதி பாக்கியநாதன் அத்தனுசியார் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பண்டத்தரிப்பு வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நடந்த வருடாந்த கூட்டத்தில் இத்தெரிவு நடைபெற்றது.

கிராம சேவையாளர் எஸ். சுந்தரமூர்த்தி செயலாளராகவும் ஆசிரியர் ஏ.கே.குலசிங்கம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் எண்மர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## மின்சாரமின்றி பெரும் அவதி

(நயினாதீவு)

நயினாதீவில் மின்சார விநியோகம் இல்லாமையால் பொதுமக்களும், மருத்துவமனையில் உள்ள நோயாளர்களும் பெரிதும் கஷ்டமுறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலிடம் இது விடயத்தில் அசமந்தப் போக்கில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## குடிநீர்ப்பணி துரிதம்

(யாழ்ப்பாணம்)

உமையாள் புரத்தில் நிலவி வரும் குடிநீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உமையாள் புரம் கிராம அபிவிருத்திச் சங்கம் எடுத்த முயற்சியின் பயனாக சமூக சேவைகள் திணைக்களம் அதிவிரைவில் குடிநீர் வழங்குவதற்கான ஆயத்தங்களை மேற் கொண்டுள்ளது.

குடிநீரை விநியோகம் செய்வதற்கென விசுவமடு றெட்பானா கழகத்தினர் ஐயாயிரம் ரூபா பெறுமதியுள்ள பௌஸர் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளனர். மேலும் அபிவிருத்திச் சங்கத்தின் சிரமதானப் பணிமூலம் பிரதான பாதையொன்று ஒரு மைல் தூரம் வரை திருத்தியமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாவனையாளர் பாதுகாப்புச் சங்கம்

(பூநகரி)

பூநகரி செட்டியகுறிச்சிபாவனையாளர் பாதுகாப்புச் சங்கத்தின் புதுவருட உத்தியோகத்தர் தெரிவுக்கான கூட்டம் நடைபெற்றது. தலைவராக இ. செல்வராசாவும், செயலாளராக க.புஷ்பராசாவும், பொருளாளராக மு.செல்வநாயகமும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## இடமாற்றம்

(இருபாலை)

கோப்பாய் உப-அலுவலகத்தில் பிரதம எழுதுவினைஞராகக் கடமை புரியும் திரு. எஸ். இராஜதுரை அடுத்த மாதம் முதல் தொடக்கம் உரும்பராய் உப-அலுவலகத்திற்கு மாற்றலாகிச் செல்வதையிட்டு, முப்பதாம் திகதி கோப்பாய் உப-அலுவலகத்தில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எஸ். கருணைநாதன் தலைமையில் அவரின் சேவைநலன் பாராட்டுப் பிரிவுபசார வைபவம் நடைபெறவுள்ளது.

# கோப்பாயில் மீண்டும் எரிபொருள் விநியோகம்

(இருபாலை)

வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கோப்பாய் எரிபொருள் விற்பனை நிலையம் அரசாங்க வர்த்தகமானியில் "பதிவு வழி" இடப்பட்டு இப் பொழுது தங்குதடையின்றி பெற்றோல், டீசல், மண்ணெண்ணை ஆகியவற்றை விநியோகம் செய்து வருகின்றது.

இதன் சேவையால் இப் பகுதி விவசாயிகளும், சில்லறை விற்பனையாளர்களும் தங்களுக்கு வேண்டிய எரிபொருளைப் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் தினமும் கைதடி, அச்சுவேலி, மானிப்பாய் புன்னாலைக்கட்டுவன் முதலிய பகுதிகளில் இருந்தும் விவசாயிகள், வாகனச் சொந்தக்காரர்கள் வந்து நியாய விலையில் எரிபொருளை பெற்றுச் செல்கிறார்கள்.

இவ் எரிபொருள் நிலையத்திற்கு கோப்பாய்ப் பகுதி பொதுமக்களும், இளைஞர்களும் ஆதரவும், பாதுகாப்பும் கொடுத்து வருகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# பயிற்சி முடிந்து பல மாதம்; பணம் கிடைக்கவில்லை!

(நயினாதீவு)

திட்ட அமுலாக்கல் அமைச்சின் மகளிர் பணியகம் சுவிடிஸ் உதவியுடன் புங்குடுதீவில் நடத்திய மகளிருக்கான சுயதொழில் பயிற்சிமுடிவடைந்து பல மாதங்களாயும் அப்பயிற்சியில் பங்குபற்றிய யுவதிகளுக்குரிய சான்றிதழ்களும் ஊக்குவிப்புப்பணம் தலா 1500ம் போக்குவரத்துச் செலவும் இதுவரை வழங்கப் படாதது குறித்து மேற்படி பயிற்சியில் பங்குபற்றிய யுவதிகள் கவலையும் விரக்தியும் அடைந்துள்ளனர்.

இப்பயிற்சியின் போது ஒப்பந்த அடிப்படையில் தேநீர் வழங்கிய ஒரு மூதாட்டிக்குரிய கொடுப்பனவுகளும் செய்யப் படவில்லையாம்.

போக்குவரத்துப் படிகள் உடன் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நாளாந்தம் கடன் பெற்று பயிற்சியில் கலந்து கொண்ட ஏழை யுவதிகள் பணம் கிடைக்காததால் பெரும் ஏமாற்றமும் அடைந்துள்ளனர்.

## பாரதி கலைமன்ற நிர்வாகத்தினர்

(சுழிபுரம்)

சுழிபுரம் மேற்கு பாரதி கலைமன்ற நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகியுள்ளனர்.

தலைவர் திரு. வ. கைலைநாதன், உப-தலைவர் திரு. அ. நீலவண்ணன், செயலாளர் திரு. து. இரவீந்திரன், உப-செயலாளர் திரு. பொ. குணானந்தன், போஷகர்களாக மூவரும், செயற்குழுவுக்குப் பதினொரு பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## சிரமதானம்

(சுண்டுக்குளி)

சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் விளையாட்டு மைதானம் சிரமதானம் மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டது. கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஏ. வி தம்பிராஜா இச்சிரமதானப் பணியை ஆரம்பித்து வைத்தார். பாடசாலை அதிபர் திரு. கி. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றுவரும் இவ் விளையாட்டு மைதானப் புனரமைப்பில் சிறுப்பிட்டி ஜன சக்தி சனசமூக நிலைய உறுப்பினரும் பங்குபற்றி வருகின்றனர்.

## மருத்துவ மாது இல்லை

(நயினாதீவு)

நயினாதீவில் மருத்துவ மாது இல்லையாம். இங்கு கடமையாற்றியவர் அனலைதீவுக்கு இடமாற்றலாகிச் சென்ற பொழுதிலும் புதியவரை நியமிக்காததாலேயே இக்குறைபாடு ஏற்பட்டுள்ளது. இதனால் கர்ப்பிணிகளும், குழந்தைகளும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

# பாதுகாப்பில்லாத ரயில் கடவை மக்களுக்குப் பேரபாய நிலை

(அச்சுவேலி)

யாழ்குடா நாட்டில் பாதுகாப்பற்ற புகையிரத கடவைகள் பொது மக்களை எந்த நேரமும் விபத்தில் சிக்க வைக்கக் கூடிய நிலையில் காணப்படுகின்றன. இது பற்றி இதுவரையும் புகையிரதப் பகுதியினர் மற்றும் அதனுடன் தொடர்பான அமைப்புக்களும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது சம்பந்தப்பட்ட பாதுகாப்பற்ற கடவைகளுக்கூடாக பிரயாணஞ் செய்யும் பொது மக்களைக் கவலை கொள்ளச் செய்துள்ளது.

கடந்த வருடம் வடபகுதியில் ஏற்பட்ட வன்செயல்களையடுத்து பல இடங்களிலும் புகையிரதப் பாதைகளில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்புக் கதவுகள் முற்றாகச் சேதமாக்கப்பட்டிருந்தன.

அண்மையில் மல்லாகம் பகுதியில் இரண்டு சக்கர உழவு வண்டியில் சென்றவர்கள் விபத்துக்குள்ளாகியதுடன் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது

யாழ். நகரில் சனநாட்டம் அதிகரித்த பகுதிகளின் கடவைகள் உட்பட பல கடவைகள் பாதுகாப்புக் கதவுகளின்றியே காணப்படுகின்றன.

## கௌரவம்

(சித்தன்கேணி)

தமிழ்க் கலைவளர்ச்சிக்குத் தொண்டாற்றிவரும் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் திரு. வ. உமாபதிசிவம் 'கலாநிதி'ப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

## நீர்வேலியில் இணக்க சபை

(இருபாலை)

நீர்வேலி மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு நீர்வேலி கிராம அபிவிருத்திச் சங்கத்தின்கீழ் சமாதான இணக்கசபை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் தலைவராக திரு. த. வேலாயுதபிள்ளை தெரிவு செய்யப்பட்டுள்ளார். உப தலைவராக திரு. அ. பூதத்தம்பி, செயலாளராக திரு. இ. தவராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# இராசேந்திரனார் நூலகம் அம்பாள் நகரில் உதயம்

(பரந்தன்)

கிளிநொச்சி அம்பாள் நகர்ப் பகுதியில், அம்பாள் நகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் "இராசேந்திரனார் நூலகம்" ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் சமயப் பணிகளிலும் பொதுச் சேவையிலும் ஈடுபட்டு வரும் இளைப்பாறிய ஓவசியர் வே. இராசேந்திரம் அவர்களின் சேவையைக் கௌரவிக்கும் முகமாகவே அவரது பெயரில் இந்நூலகம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

நூலகத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மாவட்ட அபிவிருத்தி உதவி அரசாங்க அதிபர் க.குணராசா சம்பிரதாய பூர்வமாக நூலகத்தைத் திறந்து வைத்தார். இவ் வைபவத்தில் விசேட சேவை அலுவலர் மு.தர்மபாலன், கிராம அபிவிருத்தி அதிகாரி என்.சிவகுமாரன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## ராஜகோபுர நிர்மாணம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கெனச் சுமார் 8 லட்சம் ரூபா செலவில் அழகிய இராஜகோபுரமொன்று நிர்மாணிக்கப்படுகிறது. இக் கோபுரத்தின் அமைப்பு வேலைகள் விரைவில் பூர்த்தியடையவுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து இராஜகோபுர கும்பாபிஷேகம் இடம் பெறுமென்றும் பிரஸ்தாப ஆலய பரிபாலன சபையின் தலைவர் திரு. சி. மாணிக்கம் தெரிவித்தார்.

இவ் இராஜகோபுரத் திருப்பணிக்குப் பொதுமக்கள் பெருமளவில் நிதியுதவி வழங்க வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெளிநாட்டு பயணங்கள்

வெளிநாட்டுப் பிரயாண ஒழுங்குகளுக்கும்,
கடவுச்சீட்டுத் தொடர்பான சகல ஏற்பாடுகளுக்கும்

மல்ரி சேவிசஸ்

37 (351) மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் தியேட்டர் சந்தி)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22762

விற்பனைக்கு

றேடியோ, தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ டெக், இவற்றின் சகல உதிரிப்பாகங்கள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

சித்ரா ரெக்ஸ்ரைல்ஸ்
(ரெலிகோணர் கிளை)
159, மின்சார நிலைய வீதி,
நவீன சந்தை
யாழ்ப்பாணம்

உதய சிந்தனை

அறிவிலிகளின் அகராதியில் தான் இல்லை என்ற சொல் இருக்கிறது. —ஆங்கிலப் பழமொழி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்; தொலைபேசி: 23336

இதய ஒலி

30-7-1985 செவ்வாய்க்கிழமை (குரோதன ஆடி 15)

# சிரிப்புத்தான் வருகுதையா!

"இலங்கை அரசின் ஆயுதப் படையினரின் சக்தியினால் தான் தமிழ்ப் பயங்கரவாதிகள் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டனர்"

இந்த நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்பான தேசிய பந்தோபஸ்து அமைச்சர் கௌரவ லலித் அத்துலத் முதலி அவர்களின் ஆகப் பிந்திய பேச்சு இது.

தென்னிலங்கையில் நடைபெற்ற பொது நிகழ்ச்சியொன்றில் சிங்கள மக்கள் மத்தியில் அமைச்சர் ஆற்றிய இவ் உரையை இலங்கை வானொலி தனது நேற்றைய காலைச் செய்தி அறிக்கையில் முதலாவதாக அறிவித்தது.

இலங்கையின் படைப்பலம் நாளாந்தம் அதிகரிக்கப்பட்டு வருவதாகவும் இங்கு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது மட்டுமன்றி, "ராஜீவ் காந்திக்கு மதிப்பளிக்கும் வகையிலேயே தாங்கள் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதாக, தமிழ்ப் பயங்கரவாதிகள் தெரிவித்திருப்பது உண்மையல்லவென்றும், ஆயுதப்படையினரின் தாக்குதல்களை எதிர்கொள்ளமுடியாததாலேயே அவர்கள் பூட்டான் செல்ல இசைந்தனர்" என்றும் அமைச்சர் விளக்கியுள்ளார்.

கடந்த வருடம் மே மாதம் அலன் தம்பதிகள் யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்டபோது அமைச்சர் அத்துலத் முதலி நடந்து கொண்ட விதமும், அவர்களை விடுதலை செய்தபின்னர் விடுத்த அறிக்கையுமே இச் சந்தர்ப்பத்தில் நினைவுக்கு வருவது மிகப் பொருத்தமாகத் தெரிகின்றது

பயங்கரவாதிகள் என்ற பெயரில் சிறைச்சாலையில் இருந்தவர்களை வானொலியில் வேண்டுகோள் விடவைத்தும்;

யாருடனும் எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்தத் தயாரில்லை என்று கூறிய அதே வாயால், தமிழ்நாடு முதலமைச்சரையும், இந்தியப் பிரதமரையும் வேண்டுகோள் விடுமாறு கேட்டும்;

சென்னையிலிருந்த கூட்டணித் தலைவர்களிடம் அறிக்கையொன்றை விடுமாறு கேட்டும், அவைகளை நிமிடத்துக்கு ஒரு தடவை ஒலிபரப்பச் செய்தும் அலன் தம்பதிகளை இளைஞர்கள் விடுதலை செய்தவுடன், "அரசாங்கத்தின் சாமர்த்தியத்துக்குக் கிடைத்த பெரு வெற்றி" என்று தனக்குத் தானே முதுகு சொறியும் அறிக்கை விட்ட அமைச்சர் அத்துலத் முதலி, இப்போது பூட்டான் மாநாடு பற்றியும் முதுகுசொறியும் பேச்சை நிகழ்த்தியிருக்கிறார்.

கனவான்கள் ஒப்பந்தத்தில் "யுத்த நிறுத்தம்" ஏற்பட்ட பின்னர், அதுவும் இந்நாட்டு ஜனாதிபதி ஜெயவர்த்தனவும், பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியும் நேரில் சந்தித்துப் பேசி உடன்பட்ட "யுத்த நிறுத்தம்" என்ற ஒப்பந்தம் கூட அமைச்சர் அத்துலத் முதலிக்கு இப்போது தமிழ் இளைஞர்கள் பயத்தினால் சரணடைந்ததொன்றாக தெரிவதே எமக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது.

தமிழ்த் தீவிரவாதிகளை, போராளிகளை 'பயங்கரவாதிகள்' என்று அழைப்பதை நாம் பெரிதுபடுத்தவில்லை, 'இராணுவ' அமைச்சர் ஒருவருக்கு இது புதுமையான ஒன்றல்ல என்பது எமக்குத் தெரியும்,

ஆனால், பாரதத்தின் வற்புறுத்தலால் யுத்த நிறுத்தத்துக்கு உடன்பட்ட தமிழ் போராளிகள், பயத்தினால்தான் ஆயுதங்களைக் கீழே போட்டு, பூட்டான் செல்லச் சம்மதித்தார்கள் என்பதுவே எமக்குச் சிரிப்பை வரவழைக்கின்றது

பூட்டான் பேச்சுவார்த்தைகளில் தமிழ் மக்களோ, இளைஞர்களோ பூரணமான நம்பிக்கையை இன்னமும் வைக்கவில்லை என்பதை இங்கு நடைபெற்ற ஊர்வலங்கள் பறைசாற்றியுள்ளன.

தமிழ்ப் பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள் இதனைப் பகிரங்கப்படுத்தியுள்ளன,

தமிழீழ இயக்கத் தலைவர்களின் அறிக்கைகள் இதனைத் தெட்டத்தெளிவாக வெளிக்காட்டியுள்ளன.

பதினெட்டு வார இடைக்காலத்தைப் பயன்படுத்தி தென்கொரியாவிலிருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்வதும், பாகிஸ்தானில் இலங்கை இராணுவத்துக்கு போர்ப் பயிற்சி அளிப்பதும் தமிழருக்கு மட்டுமன்றி, முழு இந்தியாவுக்குமே தெரிந்த விடயங்கள்;

இலங்கையின் படைப்பலம் நாளாந்தம் அதிகரிக்கப்பட்டு வருவதாக தனது பேச்சில் அமைச்சர் தெரிவித்திருப்பதே இதனை நிரூபணமாக்குகின்றது.

இவைகளையிட்டு தமிழரை விழிப்பாகச் செயற்படுத்த உதவும் அமைச்சரின் பேச்சுகளுக்கு நாம் நன்றியுள்ளவர்களாவோம்!

ஆனால், தமிழ்ப் போராளிகளுடன் சீண்டி விளையாட விரும்புவது போல, "அவர்கள் பயந்து விட்டார்கள்; அதனால் தான் பூட்டான் செல்லச் சம்மதித்தார்கள்" என்றெல்லாம் அமைச்சர் பேசியதாக வானொலி அறிவிக்கும்போது "சிரிப்புத்தான் வருகுதையா!"

---

"த வீக்" சஞ்சிகையின் நிருபர் பகவன் ஆர்.சிங் கடல்மார்க்கமாக யாழ்ப்பாணம் வந்து, நேரில் பார்த்தவைகளின் அனுபவக் கட்டுரையின் தமிழாக்கம்

# வெள்ளிக்கிழமை 'பொடியள்' கடல்பயணம் செய்வதில்லை!

**யாழ்ப்பாண யாத்திரை 7**

யாழ்ப்பாண "டச்சுக்" கோட்டை, அதன் பக்கத்திலான யாழ். பொலிசு நிலையம், ஆகியவற்றைக் கண்ணுற்காண நான் மிக விரும்பினேன். ஆனால், அதனை அனுமதிக்கத் திடமாக மறுத்தனர் இயக்க இளைஞர்கள். "இராணுவம் வெளியே திரிகிறது. துப்பாக்கிச் சூடுகள் எந்த நேரமும் நடைபெறுமென எதிர்பார்க்கலாம். ஆனபடியால் அவ்விடத்திற்கு அணித்தாக நாம் செல்வதற்கில்லை" என்று பொபி உறுதியாக என்னிடம் தெரிவித்தார். அவர் இப்படிச் சொல்லிமுடித்ததுதான் தாமதம். கோட்டையின் திக்கிலிருந்து துப்பாக்கி வேட்டுகள் எழலாயின. எமது குட்டித் தர்க்கத்திற்கு அவை முற்றுப்புள்ளி வைத்தன. மக்கள் அங்குமிங்கும் ஒதுக்கிடம் தேடவும், அவ்விடத்தைவிட்டு அகலவும் தலைப்பட்டனர். எங்களுடைய சிறிய "வான்" வண்டிக்கு நடுவே என்னைத் தள்ளிவிட்டுக்கொண்ட பொபி, "விரைவில் அவ்விடம்விட்டு வெளியேறுமாறு" சாரதிக்குக் கட்டளை பிறப்பித்தார். ஓர் ஐந்து நிமிட ஓட்டத்துடன் மனத் திருப்தி எய்திய பொபி, ஒரு பக்கத்து ஒழுங்கைக்குள் வாகனத்தைத் திருப்ப வைத்து எஞ்ஜினையும் நிறுத்தச்செய்தார். எமது "பைலட் வான்" எனப்படும் வழிகாட்டி "வான்" வண்டியோ, எமக்கு முன்னாலேயே சென்றபடி எங்களோடு "வாக்கி – டோக்கி" என வழங்கும் "நடப்பீர் – கதைப்பீர்" கம்பியிலிக் கருவிமூலம் தொடர்பு கொண்டவாறு சென்று கொண்டிருந்தது.

இதற்கிடையில், அங்கொருவர் இங்கொருவராகச் சில பிரஜைகளைச் சந்தித்து வந்த நான், தனியாக நடமாடி இச் சந்திப்புகள் சிலவற்றைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்தேன். "இயற்கைத் தேவை ஒன்றுக்கு" இறங்குவதாகப் பாசாங்கு பண்ணிய நான், வண்டியைவிட்டு இறங்கினேன். இரண்டு "வான்"களையும் ஒரு புறத்தே விட்டுச் சென்று, குச்சொழுங்கை ஒன்றினுட் புகுந்த நான், திடுமென ஓட்டம் பிடிக்கத் தொடங்கினேன். நான் சந்தியை அடைந்ததும், திரும்பிப் பார்த்தேன். ஒழுங்கையின் கோடியில் பொபி "கல்லாகச் சமைந்து போய்" நிற்பது என் கண்ணில் பட்டது. தொடர்ந்தும் நான் திரும்பி ஓடலானேன். இடையிடையே மூச்சுத் திணற, இரண்டொரு கணம் தரித்து நின்று, நின்று, பிரதான வீதியை அடைந்து விட்டேன் என எண்ணியதும், மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க, இடது கைப் பக்கமாக நான் திரும்பினேன்.

ஏன் தெரியுமா? நகரின் மத்திக்குச் செல்லும் பாதை அது என்பது எனது அனுமானம். மேலும், இராணுவ ரோந்துகள் அல்லது சுற்றுக்காவல்கள் நடைபெறும் களமும் அது எனவே, எனது படம் பிடி கருவியாகிய "கமரா"வையும் தளர்த்தி நான் தயாராக வைத்துக் கொண்டேன். அவ்வேளை மாலை 4 மணியைக் கடந்து விட்டதாகையால், சூரியன் நன்றாக ஒளி வீசிக் கொண்டு இருந்தது. நான் ஒரு சில அடிதான் எடுத்து வைத்திருப்பேன். எனக்கு முன்னால் சிறிது தூரத்தில் கூக்குரல்கள் கேட்டன. இரண்டு சைக்கிள்களில் 'சில பெடியள்' வீதி வழியே வேகமாக வந்து கொண்டு இருக்க, அவர்களுக்குப் பின்னால் இருநூறு யாரளவு தொலைவில், கடும் பச்சை நிற ஜீப்-வண்டி ஒன்று மிக ஆறுதலாக ஊர்ந்து வருவதை நான் கண்டேன். சட்டெனத் திரும்பி ஓடிய நான், சற்றுமுன்னர் விட்டு நீங்கிய அதே ஒழுங்கைக்கு உள்ளேயே நுழைந்தேன்: தனது வெள்ளை நிற 'வானுடன்' அங்கு நின்ற பொபியிடம், இராணுவ ஜீப்பொன்று அவ்விடத்தை அணுகிக்கொண்டிருந்தது என நான் கூறினேன். உரத்து வசவு வார்த்தையொன்றை உதிர்த்த அவர், தனது சாரதிக்கும் மற்றைய 'வழிகாட்டி வான்' வாகனத்திற்கும் சடசர் சடாரெனக் கட்டளைகள் பிறப்பித்தார்.

தானும் நானும் இருந்த 'வானை' பிரதான வீதிக்குச் செல்லுமாறு பொபி கட்டளையிட, அது அப்படியே புறப்பட்டு, பின்பு வலதுகைப் பக்கமாகத் திரும்பி, மின்னல் வேகத்தில் இராணுவ ஜீப்பின் முன்னால் ஓடியது. எமக்குப் பின்னால், 'பைலட்' (அதாவது வழி காட்டி) 'வான்' ஒழுங்கையிலேயே நின்றது. பக்கத்து ஒழுங்கை ஒன்றுள்ளிருந்து தங்கள் முன்புறமாக திடுதிப்பென விரைந்தேகும் 'வான்' -வண்டியைக் கண்டஇராணுவத்தினர் திகைப்பிற்கு ஆளாகி, தமது ஜீப்பையும் பாய்ச்சலாக முடுக்கிவிட்டனர். ஜீப் எமது 'வானைத்' துரந்து வரலாயிற்று. 'வான்' சடுதியாக வலது புறத்து ஒடுக்கமான ஒழுங்கை ஒன்றுள் புகுந்ததும் ரயர்களின் இறப்பர் எரியும் மணம் எமது மூக்கைத் துளைத்தது, அது அவ்வாறு திரும்புகையில், சைக்கிளில் வந்துகொண்டிருந்த ஒரு முதியவரை மயிரிழையில் எம்முடன் மோதாமற் பார்த்துக் கொண்டோம். இன்னும் சில அங்குலங்கள் அவர் நெருங்கி இருந்திருப்பாராயின், எமது வான் அவரைப் பாரதூரமாக மோதி வீழ்த்தியிருக்கும். யாழ்ப்பாண மாநகரத்தின் வளைந்துவளைந்து செல்லும் ஒடுங்கிய ஒழுங்கைகள் ஊடாக ஊர்திகளைச் செலுத்துவதில் தமிழ் விடுதலைப் போராளிகளான "பெடியள்," ஈடு இணை அற்றவர்கள். ஒருசில கணப் பொழுதில் இராணுவ ஜீப் எங்கு போயிற்றோ தெரியாது. கண்ணுக்கு எட்டாது அது மறைந்து விட்டது. சில நிமிடங்கள் கழித்து எங்களுடைய வழிகாட்டி "வானும்" எம்முடன் வந்து சேர்ந்து கொள்ளவே எம் எல்லோர் முகங்களிலும் குறுநகை மலர்ந்தது.

குறும்பாக என்னை நோக்கிச் சிரித்த பொபி, 'ஏதாவது 'திகில்' வேண்டும் என்று அந்தரித்தீர்களே, கிடைத்து விட்ட தாக்கும்!' எனக் கிண்டலாகக் கூறினார். 'ஆனால், நிழற்படம் ஒன்றுகூடப் பிடிக்க எனக்கு வாய்க்கவில்லையே.' எனக் குறைப்பட்டுக் கொண்டேன் நான். "படங்கள் எடுக்காவிட்டாலென்ன, பரவாயில்லை. நீங்கள் உயிருடன் இருக்கிறீர்களே அது போதும்." என அவர் தேறுதல்மொழி கூறினார். சில நொடிகளில், வழமையான அவரது கிலேசமும் கடூரமும் திடீரென அவருடைய முகத்திற் படரலாயின. அதன் பின்னர், அவர்களுடைய கண்வீச்சிற்கு அப்பால் செல்ல என்னை அவர்கள் கணமேனும் விட்டாரில்லை.

மறு நாளே நான் பாரதம்

—2ஆம் பக்கம் பார்க்க

---

உ

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

அருளிச் செய்த

## கோளறு பதிகம்

(எட்டாவது பாடல்)

வேள்பட விழிசெய் தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனும்
வாண் மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ் கடல் சூழ் இலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ் கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மன்மதன் பட்டொழியும் படி அந்நாளில் விழித்து நோக்கி உமாதேவியாரோடும் கூடினவராய் ஒளியுடைய சந்திரனையும், வன்னியையும், கொன்றை மலரையும் சிரசில் தரித்து எருதின்மேல் எழுந்தருளி வந்து அடியேனது உள்ளத்தில் புகுந்த காரணத்தால் ஏழு கடல்களும் சூழ்ந்த இலங்கைக்கரசனாகிய இராவணனோடு ஆழ்ந்த கடல்களும், பிற துன்பங்களும் நெருங்கி வருத்த மாட்டாவாய் திருத்தொண்டர்களுக்கு அதிகமாக நல்லன நல்லன, அவைகள் நல்லன என்றவாறு.

இத் திருப்பாட்டால் இராவணன் முதலியோரால் வருந் துன்பங்கள் இலவாதல் கூறப்பட்டது.

# பஞ்சாப் மாநிலத் தேர்தல் விரைவில்! இ. காங்கிரஸ், அகாலிதள் நேரடியாக மோதுகின்றன

(புதுடில்லி)

பஞ்சாப் மாநிலத்தில் விரைவில் தேர்தல் நடத்தப்படும் என்று அம்மாநில கவர்னர் அர்ஜுன் சிங் பத்திரிகையாளர் மாநாடொன்றில் வைத்து அறிவித்துள்ளார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் பஞ்சாபிற்கு கூடுதல் அரசியல், பொருளாதார உரிமைகள் வழங்கப்படவேண்டுமெனக்கோரி சீக்கியர்கள் ஆரம்பித்த போராட்டத்தை படுத்து அங்கு சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்ததால் பஞ்சாப் மாநில அரசு கலைக்கப்பட்டதுடன் அங்கு சிவில் நிர்வாகமும் சீர்குலைந்தது.

சென்ற வாரம் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும், சீக்கிய அரசியல் கட்சியான அகாலிதளின் தலைவர் சர் ஹர்ச்சன் சிங் லோங்கோவாலுக்கும் இடையே இடம்பெற்ற ஒப்பந்தத்தையடுத்து பஞ்சாப் நிலைமை வழமைக்குத் திரும்புவதால் அங்கு மீண்டும் தேர்தலை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் அதில் அகாலிதள் கட்சியும் இந்திரா காங்கிரசும் நேரடியாக மோதும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## வீடியோ ரெலிபோன்கள் ஜேர்மனியில் அறிமுகம்

(கொலோன்)

நவீன முறையில் அமைந்த வீடியோ ரெலிபோன்கள் ஜேர்மனியில் இப்பொழுது அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன. கொலோன் நகரிலுள்ள ஃபோரிட் மோட்டார் கம்பனியின் பொறியியலாளர்களே இதனை உருவாக்கியுள்ளனர்.

ஒரு நாட்டிலுள்ள பிரமுகர் அல்லது அரசியல் தலைவர் ஒருவர் தமது அலுவலகத்திலிருந்து கொண்டே காரியாலயங்களில் கலந்து கொள்வதற்கு இச்சாதனம் வசதியளிக்கிறது. இச்சாதனத்தின் மூலம் ஒருவரோடொருவர் உரையாடுவதற்கும், குறிப்புகளை ஒப்பு நோக்கவும் முடியும். பல்வேறு நாடுகளிலுமுள்ள ஃபோரிட் கம்பனிகள் தங்களது கண்டு பிடிப்புக்கள் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் ஆலோசிக்கவும் இச்சாதனத்தைப் பயன் படுத்துகின்றனர்.

## கடும் மழையால் பலர் மரணம்!

(புதுடில்லி)

இந்தியாவின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வெள்ள நிலைமை பெருமளவு பாதிப்புக்களை ஏற்படுத்தியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது, அஸ்ஸாமில் ஆறுபேரும், பஞ்சாப், ஹரியானா, ஹிமாசல் பிரதேசம் ஆகிய இடங்களில் 98 பேரும் கடும் மழையினாலும் வெள்ளத்தினாலும் மரணமடைந்துள்ளனர்.

உத்தர பிரதேஷ், பீகார் ஆகிய பகுதிகளிலுள்ள பிரதான ஆறுகள் பல இக் கடும் மழையினால் பெருக்கெடுத்துள்ளன.

## பாக். வெளியுறவுச் செயலர் இந்தியாவுக்கு விஜயம்!

(புதுடில்லி)

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர் ஜனாப் நியாஸ் நயாக் இந்தியாவிற்கான விஜயமொன்றை நேற்று ஆரம்பித்தார்.

அமைதி, நட்புறவு, ஒத்துழைப்பு பற்றிய இந்திய அரசின் யோசனைகள், பாகிஸ்தானின் போர் நிறுத்த உடன்பாடு உட்பட பல்வேறு விஷயங்கள் தொடர்பாக பாக். வெளியுறவுச் செயலாளர் இந்திய அதிகாரிகளுடன் பேசுவார்.

இந்திய வெளியுறவு இணை அமைச்சர் குர்ஷித் ஆலம்கானுடனும் அவர் பல சந்திப்புகளை மேற்கொள்வார். சில தினங்களுக்கு முன்னர் புதுடில்லியில் இடம்பெற்ற பாரத பாக். கூட்டுக் குழுவின் கூட்டம் தொடர்பாகவே இவ்விஜயம் அமைகிறது.

## உகண்டா புதிய அரசை லிபியா அங்கீகரித்தது!

(நைரோபி)

உகண்டாவில் இடம் பெற்ற புரட்சியையடுத்து அங்கு இடம் பெற்ற கொள்ளைச் சம்பவங்களும் துப்பாக்கிச் சண்டையும் இப்பொழுது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு அங்கு அமைதி நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உகண்டாவின் சகல பகுதிகளிலும் முழு நாள் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது. நாட்டின் எல்லைப் பகுதிகளும் சகல விமான நிலையங்களும் தொடர்ந்தும் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளன.

தலைநகரான கம்பாலாவின் முக்கிய பகுதியிலுள்ள சகல கடைகளும் கட்டுக்கடங்காத இராணுவத்தினராலும் பொது மக்களாலும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. பொது மக்களுடைய சில வீடுகளும் இவர்களால் தாக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டது. நகரில் நின்ற சில வாகனங்களும் தாக்கப்பட்டுள்ளன,

இவ்வாறான வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவோருக்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென புதிய இராணுவத் தளபதி லெ டினட் ஜெனரல் ஒகெல்லோ அறிவித்துள்ளார். சகல இராணுவத் துருப்புக்களும் முகாம்களுக்குள் இருக்க வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கவிழ்க்கப்பட்ட ஆட்சியாளர் தலைமையான அமைச்சர்கள் அனைவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் அதேவேளையில் சுமார் இருபது அமைச்சர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வேறு சில அமைச்சர்கள் கென்யாவிற்குத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பாலாவிலும் மற்றைய முக்கிய நகரங்களிலுமுள்ள வெளிநாட்டவர்கள் பாதுகாப்பாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பற்ற இடங்களில் வசித்துவந்த இந்தியர்கள் பலருக்கு கம்பாலாவிலுள்ள இந்தியத் தூதரகத்தில் இடவசதி அளிக்கப்பட்டுள்ளது

இதேவேளையில் உகண்டாவில் ஏற்பட்டுள்ள புதிய ஆட்சியை கேணல் கடாபி தலைமையிலான லிபிய அரசாங்கம் அங்கீகரித்துள்ளதாக அறிவித்துள்ளது.

## இளைஞர் விழா

பன்னிரண்டாவது உலக மாணவர் இளைஞர் விழா மாஸ்கோ லெனின் ஸ்ரேடியத்தில் சென்ற சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

உங்கள் முதலீட்டு வளர்ச்சியில் அக்கறை கொண்டு அபிமானம் பெற்ற
தமிழர் நிதியம் நிதி நிறுவனத்தினர் வழங்கும்
மேலும் ஒரு சலுகை!
இதுவரை மாதாந்த வட்டி பெறுவோருக்கு வழங்கி வந்த 25% வீதவட்டி
30% வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது
தமிழர் நிதியம் நிதி நிறுவனத்தினரின்
தனித்துவமான 36% வட்டி முதிர்வுநிலை வைப்புகளுக்கு வழமைபோல் நீங்கள் பெறலாம்
36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

30.7.85 செவ்வாய்க்கிழமை

ஈழமுரசு

## இளைஞர்கள் தப்பினர்; கார் மட்டும் அகப்பட்டது!

(கிளிநொச்சி)

கார் ஒன்றில் பயணம்செய்த இளைஞர்களைக் கைது செய்வதற்கு படைவீரர்கள் முயற்சி எடுத்தனராம். அதற்கு முன்னரே படையினரை அடையாளம் கண்டுகொண்டதால் இளைஞர்கள் தப்பிவிட்டனர். ஆனால் அவர்கள் பயணம்செய்த கார் படையினரிடம் அகப்பட்டுக் கொண்டது. இச்சம்பவம் கிளிநொச்சியில் நடைபெற்றது. இ. போ. ச. பஸ் ஒன்றில் படை வீரர்கள் பயணம் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இளைஞர்கள் காரைவிட்டு தப்பியோடியதாலேயே கார் அகப்பட நேர்ந்ததாம்.

அமைச்சர் அத்துலத் முதலி பேச்சு:

# எமது ஆயுதப் படையினரின் சக்தியினால்தான் தீவிரவாதிகள் பூட்டான் செல்லச் சம்மதித்தனர்

(ஹந்த எலிய)

''எமது ஆயுதப்படையின் சக்தியினால்தான் தீவிரவாதக் குழுக்கள் திம்பு பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்தன: எமது நாட்டின் ஆயுதப் படையினர் மற்றும் பொலிஸாரின் சக்தியை யாரும் குறைவாக எடைபோடக் கூடாது'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத்முதலி ஹந்தனெலிய மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமய வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், தீவிரவாதிகளின் பலத்தை முறியடிக்கவும், அவர்களிடமிருந்து வரும் சவாலை எதிர்நோக்கவும், எமது படைகளின் பலம் நாளாந்தம் அதிகரிக்கப்பட்டு வருகின்றது.

பிரதம மந்திரி ராஜீவ் காந்தியின் யோசனைக்கு மதிப்பளித்தே தாங்கள் திம்புப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டதாகத் தீவிரவாதிகள் கூறியிருக்கிறார்கள். எமது ஆயுதப் படையினரோடு போராட்டம் நடத்த வேண்டிய கஷ்ட நிலையை எதிர்நோக்க வேண்டியிருந்த தீவிரவாதிகளினால் இதனைவிட வேறெந்த விதமான விளக்கத்தைக் கொடுக்க முடியும் என்றும் அமைச்சர் சொன்னார்.

மகா சங்கத்தினரின் கேள்வியொன்றுக்கு அமைச்சர் பதிலளிக்கையில்: இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியமென்று ஜனாதிபதி கருதுகிறார். இந்தியா பயங்கரவாதத்துக்கு எதிராகப் போரிட முன்வருமென்று சில ஆண்டுகளுக்கு முன்னர் எவரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். இன்றோ இந்தியா தொடர்பாக விஸ்தரிக்கப்படுகின்ற சட்டக் கொள்கைகள் மூலம் அந்த நாட்டினது நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள முடிகின்றது. நெருக்கடி நிலைமைகளின்போது இதுபோன்ற ராஜதந்திர முறைகளை எமது பண்டைக்கால மன்னரும் கையாண்டிருந்தனர். பல்வேறு பிரச்சினைகள் மலிந்து காணப்படுகின்ற இந்த உலகில் நாமும் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியே இருக்கின்றது என்றார்.

அரசாங்க அதிபர் வேண்டுகோள்:

## விதைநெல் தேவையெனில் இப்போதே விவசாய நிலையங்களில் பதிவு செய்யுங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் 12016 ஹெக்டர் வயல் காணியில் இவ்வருடம் நெற்செய்கையை மேற்கொள்வதென யாழ்ப்பாணம் செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட விவசாய இணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

சுமார் ஏழாயிரம் ஹெக்டரில் 'எச்-4' இன நெல் பயிரிடப்படும். ஏறத்தாழ மூவாயிரம் ஹெக்டரில் உள்ளூர் நெல்லினங்கள் பயிரிடப்படும்.

இம்முறை பரந்தன், கிளிநொச்சி விவசாயப் பண்ணைகளில் விதை நெல் சேமிக்கப்படாததால், விவசாயிகள் தமக்குத் தேவையான விதை நெல்லை உள்ளூரிலேயே பெற வேண்டியிருக்குமென கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

எனினும், விதைநெல் தேவைப்படும் விவசாயிகள் தமது பகுதி விவசாய சேவை நிலையங்களில் இப்பொழுதே தமது தேவையைக் குறிப்பிட்டு பதிவு செய்ய வேண்டுமென்று கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### நாளை வருடாந்த இல்லப் போட்டி

ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் முப்பத்தோராம் திகதி புதன்கிழமை அதிபர் திருமதி பி. கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது. யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி ஆர். சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகவும் வட்டாரக் கல்வி அதிகாரி எஸ். தனஞ்செயன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். திருமதி ரி. சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்குவார்.

### வவுனியா....

...1 ஆம் பக்கத் தொடர்

ளம் காண்பதற்காக நேற்று முழுவதும் ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்தது.

நேற்றிரவு கிடைத்த தகவல்களின்படி இறந்தவர் குமார் என அழைக்கப்படும் 26 வயது இளைஞர் என்று தெரியவந்துள்ளது.

அதேவேளை கடந்த வியாழக்கிழமை இரவு இனம்தெரியாதவர்களால் வவுனியாவில் கடத்திச் செல்லப்பட்ட ராணுவ வீரர் நிகால் ஜெயவர்த்தனவைப் பற்றிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லையென்று தெரிவிக்கப்பட்டது.

### உகண்டா ...

... 1-ஆம் பக்கத் தொடர்

புதிய ஜனாதிபதி விரைவில் பிரதமர் ஒருவரை நியமித்து இடைக்கால அரசாங்கத்தை அமைப்பார் எனவும் அந்த வானொலி மேலும் அறிவித்தது.

உகண்டாவின் சில பகுதிகளில் சிறு சிறு அசம்பாவிதங்கள் இடம்பெற்றதாகவும், இராணுவத்தினர் சகலதையும் தமது கட்டுப்பாட்டுக்கு கீழ் கொண்டு வந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### ராஜதந்திரிகள்....

...1-ஆம் பக்கத் தொடர்

அங்கிருந்து வெளியேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

லிபியத் தலைவர் கேணல் கடாபியை எதிர்த்து மேற்கு ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரிய லிபியர்களை கொல்வதற்கு இவர்கள் திட்டமிட்டதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்ததையடுத்தே இந்த நான்கு பேரும் வெளியேற்றப்பட்டனர்.

### விடுதலை....

—1-ஆம் பக்கத் தொடர்

ஆண்களும் பெண்களும் இதில் கலந்து கொண்டனர்.

83 ஜூலை படுகொலைகளைக் கண்டித்து நடைபெற்ற ஊர்வலத்தில் பங்குபற்றிய பின்னர் பல்கலைக்கழகத்திற்கு சமீபமாக நின்று கொண்டிருந்த போதே இவர் கடத்தப்பட்டாராம்.

## ஜப்பானில் எம். ஜி. ஆர். நலமாகவே இருக்கிறார்

(சென்னை)

ஜப்பான் சென்றிருக்கும் தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் நலமாக இருப்பதாக சென்னையில் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் தம்முடன் தெளிவான குரலில் பேசியதாகவும், காவிரி நீர் பிரச்சினை பற்றி விபரமாகக் கேட்டறிந்து கொண்டதாகவும் தமிழக தலைமைச் செயலர் திரு. டி. வி. அந்தோனி பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

முதல்வர் நேற்று நிதி அமைச்சர் நெடுஞ்செழியனுடனும் தொலைபேசியில் கதைத்தபோது, தாம் சுகமாக இருப்பதாக மக்களிடம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிவேக ரயிலொன்றில் முதல்வர் டோக்கியோ செல்ல ஏற்பாடாகியிருந்தது.

### அமைச்சர்....

...1 ஆம் பக்கத் தொடர்

அமைச்சரான டம்டோங் அமைச்சரவைக் கூட்டத்திற்குச் செல்லும் வழியில் காரிலிருந்தபடி தமக்குத்தாமே தலையில் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார். பாங்கொக் வைத்தியசாலைக்கு அவரை உடனடியாக எடுத்துச் சென்றபோதிலும் அவர் உயிரைக் காப்பாற்ற முடியவில்லையெனச் செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### பூமியதிர்ச்சி

(புதுடில்லி)

இந்தியாவின் சில பகுதிகளில் நேற்று பகல் ஒருமணியளவில் பூமி நடுக்கம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

புதுடில்லியில் ஒரு நிமிடமும், சிம்லாவில் இரு நிமிடமும், பஞ்சாப் பகுதிகளில் இருபது விநாடிகளும் இந்த பூமி நடுக்கம் இடம்பெற்றது.

இச்சம்பவங்களால் உயிர்ச் சேதங்களோ, பொருட் சேதங்களோ ஏற்படவில்லை.

கல்வி பணிப்பாளர்

### ஜனாப் மன்சூர் பாராட்டு விழா

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம்.எம். மன்சூரின் சேவைகளைக் கௌரவிக்கும் பாராட்டு விழா நாளை புதன்கிழமை காலை கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கல்வி அதிகாரி திரு. கே.கே. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், கல்விச் சேவை ஆணைக் குழு உறுப்பினர் திரு. கே. ஜெயக்குமார், கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. ஐ. சண்முகராஜா, முன்னாள் வடவலய கல்விப் பணிப்பாளர் திரு. தி மாணிக்கவாசகர் உட்பட பல்வேறு பிரமுகர்கள் பாராட்டுரை வழங்கவுள்ளனர்.



## முக்கிய அறிவித்தல்

பாதுகாப்பு கருதியும் தவிர்க்க முடியாத காரணத்தாலும் 31.7.85 அன்று நடைபெற இருந்த நஷனல் பாதுகாப்பு சேவையினரின் நவரச விழா இனி நடைபெறமாட்டாது. விழாவிற்கு வாங்கப்பட்ட நுழைவுச் சீட்டின் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படும். 31.7.85 பத்திரிகையில் பணம் திருப்பிக் கொடுக்கும் இடம் அறிவிக்கப்படும்.

நஷனல் பாதுகாப்பு சேவை

## உறுதியான இயக்கங்களுக்கு பணிவான வேண்டுகோள்

பத்தமேனி, ஞானவைரவர் கோவிலடி அருகில் உள்ள ''பவானி இல்லம்'' A. இரத்தினம் அவரின் மகன் R பாலகிருஷ்ணன் ஆகிய எங்களுக்குச் சொந்தமான 88 சிறி 1234 சிவப்பு நிறமுடைய 'ஹொண்டா 200 மோட்டார் சைக்கிள்' 19-7-85 வெள்ளிக்கிழமை இரவு இனம்தெரியாத மூவரால் பயமுறுத்தி அடுத்த நாள் 10 மணிக்கு திருப்பித் தருவதாகக் கூறி எடுத்துச் சென்றபோதிலும் இன்னமும் இந்த மோட்டார் சைக்கிள் ஒப்படைக்கவில்லை. எனது மோட்டார் சைக்கிளை திருப்பி மீட்டுத்தர ஆவன செய்யுமாறு வேண்டுகின்றேன்.

R. பாலகிருஷ்ணன்

''பவானி இல்லம்''
பத்தமேனி ஞானவைரவர் கோவிலடி,
அச்சுவேலி

## நல்ல சந்தர்ப்பம்!

இரண்டு கிழமைக்குள் அவுஸ்திரேலியா!

முழுப் பயணத்திற்கும் உத்தரவாதமளிக்கப்பட்டு எங்கள் பிரதிநிதியுடன் விசாவோடு செல்லலாம்.

குறிப்பிட்ட திகதிகளில் மாற்றமில்லாத பயணம். ஏமாற்றத்தைத் தவிர்க்க எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்பாக வரவும்:

K. சிவா

இல. 30, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.
தொலைபேசி : 304



'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைஸிங் அசோஸியேற்றின் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 30-07-85 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி 23336